தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2025

## வளர்தமிழ் 5

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

TEDC-FR


TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
4 AV DES PRIMEVERES
77290 MITRY MORY
WWW.tamiledc.com

TEDC -FR TEDC -FR

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 05 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 10 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

TEDC-FR



TEDC -FR

TEDC -FR TEDC -FR

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. உயிர் எழுத்துகள் ________________ .
   ( 18, 247, 12 )

2. பொங்கலன்று ________________ எழுந்து நீராடுவர்.
   ( வைகறையில், மாலையில், இரவில் )

3. ________________ கல்வியில் கண்ணுங்கருத்துமாக இருப்போம்.
   ( நாம், நீ, நீங்கள் )

4. ''இனி நான் துறவி தமிழே என் துணை'' எனக் கூறியவர் ________________ .
   ( கபிலர், இளங்கோ, பாரதியார் )

5. அறம் + நூல் = ________________
   ( அறம்நூல், அறநூல், அறனூல் )

6. ஒலிம்பிக்கொடியில் ________________ வளையங்கள் உள்ளன.
   ( 7, 6, 5 )

7. தண்ணுமையின் இசையைக் ____________ இனிமையாக இருந்தது.
   ( கேட்கக்கேட்க, நினைக்கநினைக்க, எண்ணிஎண்ணி )

8. யானை பிளிறும். அது போல கரடி ________________ .
   ( குய்யிடும், கத்தும், குரைக்கும் )

TEDC-FR



TEDC -FR

TEDC -FR TEDC -FR

9. மன்னாரில் உலகப்புகழ் பெற்ற வணிகப்பொருள் ________________.

( சங்கு, தங்கம், முத்து )

10. வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என்பன ________________ .

( நாற்றிசை, நானிலம், நாற்படை )

11. எம் மண்ணின் பெருமைக்குரிய மரம் ________________ .

( பாலை, வாகை, வாழை )

12. **பழமொழி:**

செய்யுந் ________________ தெய்வம்.

( எழிலே, தொழிலே, உணவே )

13. காடும் காடு சார்ந்த இடமும் ________________ .

( குறிஞ்சி, மருதம், முல்லை )

14. பாவேந்தர் எழுதிய நூல்களில் ஒன்று ________________ .

( நீதிநெறிவிளக்கம், திருக்குறள், அழகின்சிரிப்பு )

15. மார்க்கோனி ________________ க் கண்டுபிடித்தார்.

( வானொலியை, தொலைநோக்கியை, தொலைவரியை )

16. **விடுகதை:**

நாடெல்லாம் சுற்றிவரும் நாட்டுக்குள் வராது. அது ________________ .

( தேர், கப்பல், சிற்றுந்து )

TEDC-FR



TEDC -FR

TEDC -FR
TEDC -FR

17. பின்வருவனவற்றுள் சிற்றுயிரி ________________ .

( ஆடு, முதலை, நத்தை )

18. நண்பி கூறிய நகைச்சுவையைக் கேட்டுப் பார்கவி ________________ எனச் சிரித்தாள்.

( கலகல, கடகட, மளமள )

19. வெற்றி என்பதன் எதிர்ச்சொல் ________________ .

( தோல்வி, உயர்வு, மகிழ்ச்சி )

20. முல்லை நிலத்தின் நிலையான பறவை ________________ .

( புறா, கோழி, செண்பகம் )

புள்ளிகள் 20

TEDC-FR



TEDC -FR

TEDC -FR
TEDC -FR

## 2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. நான் ________________ ச் சென்றேன். ________________ பல விலங்குகளைப் பார்த்து மகிழ்ந்தேன்.

   ( விலங்ககம் )

2. நாம் ________________ பல பயன்களைப் பெறுகின்றோம். அதனால் ________________ க் கற்பகதரு என அழைக்கின்றோம்.

   ( பனை )

3. சிறுவர்கள் ஒரு ________________ க் கண்டனர். அவர்கள் ________________ ஓடி விளையாடினர்.

   ( பூங்கா )

4. எமக்கு ________________ மழை கிடைக்கின்றது. நாம் ________________ நன்றி கூறுகின்றோம்.

   ( கதிரவன் )

5. ________________ எல்லோரும் விரும்புவர். நாம் ________________ சேர்ந்தால் நல்லறிவைப் பெறலாம்.

   ( நல்லவர் )

TEDC-FR

புள்ளிகள் 10


TEDC -FR

TEDC -FR TEDC -FR

## 3) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.

1. கொல்லான் புலாலை ______________ கைகூப்பி

   எல்லா உயிரும் தொழும்

   ( மறுத்தானைக், வெறுத்தானைக், ஒறுத்தானைக் )

2. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் ______________

   மெய்ப்பொருள் காண்பது அறிவு

   ( எப்பொருள், அப்பொருள், உரிப்பொருள் )

புள்ளிகள் 05

TEDC-FR



TEDC -FR

TEDC -FR TEDC -FR

**4) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. நேற்றுப் பெய்த மழையினால் வயல்கள் ________________ .
( அழிந்துவிட்டன, அளிந்துவிட்டன )

2. தொழுவத்திலிருந்து குதிரை கனைக்கும் ________________ கேட்டது.
( ஒளி, ஒலி )

3. கல்வி ________________ காணமுடியாதது என நாலடியார் கூறுகின்றது.
( கரை, கறை )

4. இனியன் வயிற்று ________________ யால் துன்பப்பட்டான்.
( வழி, வலி )

5. சுவரில் இருந்த ________________க் கண்டு சிறுமி அழுதாள்.
( பல்லியை, பள்ளியை )

புள்ளிகள் 10

TEDC-FR



TEDC -FR

TEDC -FR TEDC -FR

## 5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

| | | |
|---|---|---|
| ஏறி | குடிக்க | பூனைகள் |

| | |
|---|---|
| பால் | முடிவுக்கு |

பசி தாங்க முடியாத இரண்டு ____________ தாங்கள் மறைந்திருந்த வீட்டின் சமையல் அறைக்குள் புகுந்தன. அங்கே ஒரு பானை நிறையப் ____________ இருப்பதைக் கண்டன. ஆனால் அது உயரமான இடத்தில் இருந்தது. அதனால் பாலைக் ____________ முடியாமல் பூனைகள் வருந்தின. பின்னர் இரு பூனைகளும் ஒரு ____________ வந்தன. ஒரு பூனையின் முதுகிலே இன்னொரு பூனை ____________ப் பாலைக் குடிக்கலாம் எனத் திட்டமிட்டன. திட்டமிட்டபடியே இரு பூனைகளும் பாலைக் குடித்து மகிழ்ந்தன.

புள்ளிகள் 10

TEDC-FR



TEDC -FR

TEDC -FR
TEDC -FR

**6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

இசை, நடனம், நாடகம், ஓவியம், சிற்பம் என்பன இன்கலைகள் ஆகும். இன்கலைகள் மனதிற்கு மகிழ்வைத் தரும். இசையும் நடனமும் முற்காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்தன. பாடலிலும் நடனத்திலும் தேர்ச்சி பெற்ற பாணர், கூத்தர் அரசவைகளில் நிறைந்திருந்தனர். பாணரும் கூத்தரும் பாடியும் ஆடியும் மன்னர்களை மகிழ்வித்தனர். அக்காலத்தில் இசையும், நடனமும் பழந்தமிழருடைய சிறந்த பொழுதுபோக்காகத் திகழ்ந்துள்ளன.

1. எவை மனதிற்கு மகிழ்வைத் தரும்?

______________________________________________

2. எவை முற்காலத்தில் வளர்ச்சி பெற்றிருந்தன?

______________________________________________

3. பாடலிலும் நடனத்திலும் தேர்ச்சி பெற்ற பாணர், கூத்தர் எங்கே நிறைந்திருந்தனர்?

______________________________________________

______________________________________________

4. பாணரும் கூத்தரும் பாடியும் ஆடியும் யாரை மகிழ்வித்தனர்?

______________________________________________

5. இசையும் நடனமும் யாருடைய சிறந்த பொழுது போக்காகத் திகழ்ந்துள்ளன?

TEDC-FR

______________________________________________

புள்ளிகள் 10


TEDC -FR

TEDC -FR
TEDC -FR

**7) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. தமிழர்களின் வீரவிளையாட்டுகளில் ஒன்றைத் தருக.

______________________________

2. ஆவில் இருந்து கிடைக்கும் பயன்கள் எவை?

______________________________

3. மருத நிலத்தில் வாழும் மக்களை எவ்வாறு அழைப்பர்?

______________________________

4. தமிழருடைய பண்பாட்டிலே உயிரைவிட உயர்ந்தது எது?

______________________________

5. பாலாவி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஈச்சுரம் எது?

______________________________

6. பாவேந்தரின் இயற்பெயர் என்ன?

______________________________

7. ‘‘கலைகளிலே அவள் ஓவியம்’’ எனப் பாடியவர் யார்?

______________________________

TEDC-FR

புள்ளிகள் 10


TEDC -FR

TEDC -FR
TEDC -FR

**8) தரப்பட்டுள்ள சொல்லியங்களை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. ஆதிரை காலை உணவு உண்கின்றாள்.

_______________________________________________ .

2. சேயோன் நண்பனுக்கு உதவி செய்வான்.

_______________________________________________ .

3. நான் தமிழ் படிக்கின்றேன்.

_______________________________________________ .

4. எனது வீட்டுத்தோட்டம் அழகானது.

_______________________________________________ .

5. நான் ஆசிரியருக்கு நன்றி கூறினேன்.

_______________________________________________ .

புள்ளிகள் 10

TEDC-FR



TEDC -FR

TEDC -FR TEDC -FR

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- வளங்கொழிக்கும் மன்னார்
- இளங்கோவடிகள்
- விளையாட்டுகள்
- பறவைகள்

புள்ளிகள் 15

TEDC-FR



TEDC -FR

TEDC -FR TEDC -FR

TEDC-FR



TEDC -FR

TEDC -FR TEDC -FR

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC-FR



TEDC -FR

TEDC -FR TEDC -FR

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC-FR



TEDC -FR